


14.12.2024

**தலைப்புச் செய்திகள்**

1. **அரசியலமைப்பு சாசன சட்டம் மீதான விவாதத்திற்கு** பிரதமர் திரு. நரேந்திரமோடி மக்களவையில் இன்றுமாலை பதிலளிக்கிறார்.

2. **அரசியலமைப்பு சட்டத்தின் உணர்வுகளுக்கு ஏற்ப** மத்திய அரசு செயலாற்றுவதாக நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு மக்களவையில் தெரிவித்துள்ளார்.

3. **காங்கிரஸ் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு** சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் சென்னையில் இன்று காலமானார்.

4. **திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் மழை** வெள்ள மீட்பு பணிகளின் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

5. **மஸ்கட்டில் நடைபெறும் ஆசிய** கோப்பை **மகளிர் ஜுனியர்** ஹாக்கி அரையிறுதியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

□□□□□□□

**நாடாளுமன்றம்**

**அரசியல் சாசன அமைப்பு மீதான விவாதத்திற்கு** பிரதமர் திரு. நரேந்திரமோடி மக்களவையில் இன்றுமாலை பதிலளிக்கிறார்.

**முன்னதாக** மக்களவையில் அரசியல் சாசன அமைப்பின் 75-வது ஆண்டின் சிறப்பு தொடர்பான விவாதததத்தில் இன்று உரையாற்றிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு, நாட்டின் அரசியல் சாசன அமைப்பின் உணர்வுகளுக்கு ஏற்ப அனைவருக்கும் வளர்ச்சி என்ற தாரகமந்திரத்துடன் பிரதமர் செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்

அரசியல் சாசன அமைப்பை வகுத்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் பணிகளை அவர் வெகுவாக பாராட்டினார்.

அனைவருக்கும் சம உரிமை என்பதை நமது அரசியல் அமைப்பு சட்டம் வலியுறுத்துவதாக எடுத்துரைத்த அவர், சிறுபான்மையினருக்கு எதிராக எந்த பாகுபாடும் நம்நாட்டில் இல்லை என்று தெளிவுபடுத்தினார்.

சிறுபான்மையினரின் நலத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களையும் திரு. கிரண் ரிஜுஜு சுட்டிக்காட்டினார். மக்களவையில் இதுதொடர்பான விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

□□□□□□□

**பிரதமர்**

புதுதில்லியில் 4-வது தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

மத்திய, மாநில அரசுகளிடையே உறவுகளை வலுப்படுத்தி, வளர்ச்சியையும், மேம்பாட்டு பணிகளையும் விரைவுப் படுத்துவதற்கான ஆலோசனைகள் இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, தொழில்முனைவை முன்னெடுத்துச் செல்வதை நோக்கமாக கொண்டு நடைபெறும் இக்கூட்டத்தில், உற்பத்தி, சேவை, பண்ணை சாரா ஊரக நலத்திட்டங்கள், நகர்ப்புற வளர்ச்சித்திட்டங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பொருளாதார வளர்ச்சி ஆகிய 6 அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்படுகிறது.

வளர்ச்சியடைந்த பாரத பாதையில் நவீன தொழில்நுட்ப மேம்பாடுகளின் அவசியம், பொருளாதார சீர்த்திருத்தங்கள், முதலீடுகள், கர்மயோகி இயக்கம் மூலம் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனைகள் இதில் இடம்பெறுகின்றன.

அனைத்து மாநில தலைமைச் செயலாளர்கள், மூத்த குடிமைப்பணி அதிகாரிகள், பல்துறை நிபுணர்கள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

□□□□□□□

**ஜக்தீப் தன்கர்**

பேச்சுரிமை மற்றும் பேச்சுவார்த்தைகளுக்கு இடையிலான சமன்பாட்டின் மையமாக நம் ஜனநாயகம் திகழவேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய அஞ்சல் தொலைத்தொடர்பு, கணக்கியல், நிதி சேவையின் 50-வது நிறுவனநாள் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றியஅவர், செயலாக்கம் மற்றும் மதிப்பீடுகளை ஜனநாயகம் முன்னெடுத்துச் செல்வதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா, கடந்த 50 ஆண்டுகளாக நம் நாட்டின் அஞ்சல் தொலைத்தொடர்பு ஆற்றி வரும் அளப்பறிய சேவைகளை எடுத்துரைத்தார்.

இந்தியாவின் கனவுகளை நனவாக்குவதை நோக்கமாக கொண்டு இவ்விரு துறைகளும் முழுமையாக செயலாற்றுவதாக குறிப்பிட்டார்.

உலக வல்லரசு பாதையில் நம்நாடு சென்று கொண்டிருப்பதாகவும், விரைவில் சர்வதேச நாடுகளுக்கு முன்னோடி நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

□□□□□□□

**ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்**

**காங்கிரஸ் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு** சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான **நுஏமுளு** இளங்கோவன், சென்னையில் தனியார் மருத்துவமனையில் உடல்நலக்குறைவு காரணமாக இன்று காலமானார்.

அவருக்கு வயது 75.

1984-ம் ஆண்டு முதல்முறையாக சத்தியமங்கலம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்,

2004-ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் ஜவுளித்துறை இணையமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

2000-மாவது ஆண்டு முதல் 2002-ம் ஆண்டுவரை தமிழக காங்கிரஸ் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்த முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், பல்வேறு நிலைகளில் பொது வாழ்க்கை பணிகளை திறம்பட செயலாற்றியவர் என்று புகழாரம் சூட்டினார்

அன்னாரது மறைவு அரசியல் ரிதியாகவும் தனிப்பட்ட முறையிலும் தமக்கு வேதனை ஏற்படுத்துவதாகவும், அவரது இழப்பால் வாடும் குடும்பத்தினருக்கும், காங்கிரஸ் கட்சியினருக்கும் இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

இதனிடையே முதலமைச்சர், துணை முதலமைச்சர், மாநில அமைச்சர்கள் உள்ளிட்டோர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினர்.

□□□□□□□

**முதலமைச்சர்**

**திருநெல்வேலி தென்காசி மாவட்டங்களில் மழை** வெள்ளம் மீட்பு பணிகளின் முன்னேற்ம் குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று ஆய்வு மேற்கொண்டார்

இதுதொடர்பாக காணொலி வாயிலாக மீட்பு பணிகளின் நிலவரம் குறித்து கேட்டறிந்த முதலமைச்சர் முழுவீச்சில் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

இவ்விரு மாநிலங்களின் மீட்பு மற்றும் பொறுப்பு அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ள திரு. **மு.ே.** நேரு மற்றும் திரு. **முமுளுளுசு** ராமச்சந்திரனுடன் மீட்பு பணிகளை முன்னெடுத்துச் செல்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

□□□□□□□

**கே.என்.நேரு**

**திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ள பாதிப்பு** ஏற்பட்ட பகுதிகளில் 5 கோடி ரூபாய் நிதியில் மழைநீர் கால்வாய்கள் அமைக்கும் பணி உடனடியாக தொடங்கப்படும் என மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை 2-வது நாளாக இன்று ஆய்வு செய்த அவர், முக்கூடல், பாபநாசம், ஆலங்குடி சாலையில் மழைநீர் வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகள் தீவிரப்படுத்த பட்டிருப்பதாகவும், பல்வேறு பகுதிகளில் 20 ராட்சத மின் மோட்டார்களை கொண்டு வெள்ளநீர் அகற்றப்படுவதாகவும் கூறினார்.

வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படும் எனவும்,

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், இப்பணி முடிவடைந்தவுடன் நிவாரண உதவிகள் வழங்கப்படும் எனவும் கூறினார்.

.. **வாய்ஸ்** ..

□□□□□□□

**தாமிரபரணி**

**தூத்துக்குடி தாமிரபரணி ஆற்றில் ஸ்ரீவைகுண்டம்** அணைக்கட்டில் 62 ஆயிரம் கனஅடி தண்ணீரும்,

உப்பாற்று ஓடையில் 12 ஆயிரம் கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.

மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் போக்குவரத்து தடை பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. **வாய்ஸ்** ..

திருச்செந்தூர் கோவிலுக்கு வெளியூரிலிருந்து வரும் பக்தர்கள் இன்றும் நாளையும் வருவதை தவிர்க்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத் கேட்டுக்கொண்டுள்ளார்.

□□□□□□□

**கரூர் வாய்ஸ்**

**கரூர் அமராவதி ஆற்றில் ஆண்டான் கோவில்** தடுப்பணையில் 75 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

□□□□□□□

**திண்டுக்கல்**

**திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அடுக்கம்** பிரதான சாலையில் மண் சரிவு ஏற்பட்டு ராட்சத பாறைகளும் உருண்டு சாலையில் விழுந்துள்ளதால் அப்பகுதியில் பொதுமக்கள் செல்ல 3 நாட்களுக்கு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

**இம்மாவட்டத்தில் கொடைக்கானல் பேரிஜம்** ஏரிக்கு செல்ல இன்று ஒருநாள் அனுமதி வழங்கப்படவில்லை என மாவட்ட வன அலுவலர் உத்தரவிட்டுள்ளார்

□□□□□□□□

**ஏரிகள்**

**செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நண்பகல்** 12 மணிமுதல் 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்படும் என நீர்வளத்துறை அறிவித்துள்ளது.

இதன்காரணமாக கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்

24 அடிகொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் நீர்மட்டம் 22.7 அடியாக உள்ளது.

சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர், திருமுடிவாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை உள்ளிட்ட இடங்களில் வசிப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

புழல் ஏரியிலிருந்து நண்பகல் 12 மணிமுதல் ஆயிரம் கனஅடி உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

21 அடி கொண்ட புழல் ஏரியின் நீர்மட்டம் தற்போது 19.2 அடியாக உள்ளது.

நாரவாரி குப்பம், கிராண்ட்லைன், புழல், வடபெரும்பாக்கம், மஞ்சம்பாக்கம், கொசப்பூர், மணலி, சடையான்குப்பம் ஆகிய பகுதிகளில் கால்வாயின் இருபுறமும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

□□□□□□□□

**அணைகள்**

திண்டுக்கல் மாவட்டத்தில் மஞ்சளாறு அணையிலிருந்து உபரிநீர் திறக்கப்பட்டு உள்ளதால் தேனி திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□

**வானிலை**

**தென்கிழக்கு அரபிக்கடலில் நிலவும், வலுவிழந்த குறைந்த காற்றழுத்த** தாழ்வு பகுதி காரணமாக தென் தமிழகத்தில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

□□□□□□□□

**ரிசர்வ் வங்கி**

பிணைய ஆவணங்கள் இல்லா வேளாண் கடனுக்கான உச்சவரம்பை 2 லட்சம் ரூபாயாக அதிகரித்து ரிசர்வ் வங்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அடுத்தமாதம் ஒன்றாம் தேதியிலிருந்து இது நடைமுறைக்கு வரும்.

பணவீக்க விகிதத்தின் தாக்கம் மற்றும் வேளாண் இடுபொருட்களின் விலை அதிகரிப்பால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாயிகளுக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய வேளாண் அமைச்சகம் வங்கிகளை அறிவுறுத்தியுள்ளது.

□□□□□□□□

**ஹாக்கி**

**மஸ்கட்டில் நடைபெறும் ஜுனியர் மகளிர் ஆசிய கோப்பை ஹாக்கி** அரையிறுதி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

மற்றொரு அரையிறுதி போட்டியில் சீனா - தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

□□□□□□□□

**கிரிக்கெட்**

**பிரிஸ்பேனில் நடைபெறும் இந்தியாவிற்கு எதிரான** 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், முதல்நாளான இன்று ஆஸ்திரேலியா விக்கெட் இழப்பின்றி 28 ரன் எடுத்திருந்த நிலையில், மழைக் காரணமாக இன்றைய ஆட்டம் கைவிடப்பட்டது.

நாளை அரைமணிநேரம் முன்பாகவே ஆட்டம் ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இருஅணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

□□□□□□□□

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

□□□□□□□□